

மறைந்த புதுக்கோட்டை மாவட்ட கழகத்தின் மூத்த முன்னோடி கழக தீர்மானக் குழு உறுப்பினர் மிசா சி.ராமநாதன் அவர்களின் மறைவையொட்டி அமைச்சர் கே.என்.நேரு தலைமையில் சி.ராமநாதன் உடலுக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டது. நிகழ்வில் திருச்சி சிவா எம்.பி, அமைச்சர், எஸ்.ரகுபதி, அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி , அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன், முன்னாள் ஒன்றிய அமைச்சர் எஸ்.திருநாவுக்கரசர், துரை சந்திரசேகரன் எம்.எல்.ஏ., மாவட்ட கழக செயலாளர் வழக்கறிஞர் கே.கே. செல்லப்பாண்டியன், சட்டமன்ற உறுப்பினர்கள் டாக்டர் வை.முத்துராஜா, எஸ்.டி.ராமச்சந்திரன், மாநில வர்த்தகர் அணிச் செயலாளர் காசி முத்துமாணிக்கம், தீர்மானக் குழு செயலாளர் அக்ரி கணேசன், த.சந்திரசேகரன், பரணி இ.ஏ.கார்த்திகேயன் பலர் பங்கேற்றனர்.





# தி.மு.க. இளைஞர் அணி

## முத்தமிழறிஞர் கலைஞரின் பிறந்த நாள் & திராவிட மாடல் அரசின் நான்காண்டு சாதனை விளக்க தெருமுனைக் கூட்டங்கள்!

### விழுப்புரம் தெற்கு மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் செ.தினகரன் அறிவிப்பு!

கழக இளைஞர் அணியின் மாவட்ட – மாநகர – மாநில அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள் ஆலோசனைக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின்படியும் கழக இளைஞர் அணிச் செயலாளர் மாண்புமிகு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் முரசொலியில் வெளியிட்ட அறிவிப்பின்படியும், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 102–வது பிறந்த நாளை முன்னிட்டு, தமிழர் நலன் காத்த அவரின் புகழ் பரப்பும் வகையிலும், கழகத் தலைவர் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் தலைமையிலான திராவிட மாடல் அரசின் நான்காண்டு சாதனைகளை விளக்கியும், கழகப் பேச்சாளர்கள் மற்றும் இளம் பேச்சாளர்களைக் கொண்டு விழுப்புரம் தெற்கு மாவட்டத்தில் உள்ள அனைத்து ஒன்றியம்–நகரம்–பேரூர்களில் நடைபெறும் தெருமுனைக் கூட்டங்களின் விவரம் வருமாறு :–

| வ. எண் | நாள் | ஒன்றியம் / நகரம் / பேரூர் | இடம் | பேச்சாளர்கள் |
|---|---|---|---|---|
| 1 | 25.06.2025 | திருக்கோவிலூர் கிழக்கு ஒன்றியம் | சொரையப்பட்டு | ஸ்ரீராம் |
| 2 | | விக்கிரவாண்டி கிழக்கு ஒன்றியம் | மதுரப்பாக்கம் | காசி விஸ்வநாதன் வே.வல்லபராசு |
| 3 | 26.06.2025 | மணம்பூண்டி ஒன்றியம் | நாயனூர் | வழக்கறிஞர் யாசர் |
| 4 | | அரகண்டநல்லூர் பேரூர் | மார்க்கெட் வீதி | சேர்க்காடு கென்னடி |
| 5 | | காணை வடக்கு ஒன்றியம் | வெங்கமூர் | ஸ்ரீராம் |
| 6 | 27.06.2025 | காணை தெற்கு ஒன்றியம் | கருங்காலிப்பட்டு | எழும்பூர் கோபி |
| 7 | | திருவெண்ணெய்நல்லூர் பேரூர் | கடைவீதி | அப்துல் வகாப் |
| 8 | 28.06.2025 | காணை மத்திய ஒன்றியம் | செம்மேடு | எழும்பூர் கோபி |
| 9 | | முகையூர் வடக்கு ஒன்றியம் | வி.சித்தாமூர் | த.இன்பக்குமரன் |
| 10 | | திருக்கோவிலூர் நகரம் | ஐந்து முனை ரோடு | ரூ.கீர்த்தனா வி.ஆர்.ரவிச்சந்திரன் |
| 11 | | விக்கிரவாண்டி பேரூர் | கடைவீதி | கே.அஸ்வின்குமார் ப.அன்பரசு |
| 12 | 29.06.2025 | விக்கிரவாண்டி மேற்கு ஒன்றியம் | கோழிப்பண்ணை | ஆரணி மாலா |
| 13 | | திருவெண்ணெய்நல்லூர் மேற்கு ஒன்றியம் | எரலூர் | தூத்துக்குடி சரத்பாலா |
| 14 | | கோலியனூர் மேற்கு ஒன்றியம் | சோழகனூர் | மு.ரோஜா காசி.கலைச்செல்வன் |
| 15 | 30.06.2025 | முகையூர் தெற்கு ஒன்றியம் | கொங்கராயநல்லூர் | சேலம் சுஜாதா |
| 16 | | விக்கிரவாண்டி மத்திய ஒன்றியம் | பொன்னாங்குப்பம் | சிறுவானூர் பரசுராமன் |

**விழுப்புரம்**

நாள் : 21.06.2025

கலைஞர் 100
1924 - 2023





திண்டிவனத்தில் ரூ 5.56 கோடி மதிப்பீட்டில் ஒருங்கிணைந்த மாவட்ட பதிவாளர் அலுவலக கட்டிடம் கட்டுவதற்கு முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. அடிக்கல் நாட்டி பணியை துவங்கி வைத்தார்.

# கீழடி தமிழர் தாய்மடி : முதல்வர் எழுப்பிய போர் முழக்கம் களம் கண்ட மாணவர் அணி



கீழடி அகழாய்வு அறிக்கையை ஒன்றிய அரசிடம் சமர்ப்பித்து இரண்டு ஆண்டுகள் கடந்த நிலையிலும் அதை வெளியிடாமல் “கீழடி அகழாய்வு அறிக்கையில் போதுமான ஆய்வுத் தகவல்கள் இல்லை. அதை ஏற்கக் கூடுதல் ஆய்வுகள் தேவை. ஒரே ஒரு கண்டுபிடிப்பு மட்டும் எல்லாவற்றையும் மாற்றிவிடாது” என ஒன்றிய கலாசார மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சர் கஜேந்திர சிங் ஷெகாவத் சென்னையில் வைத்தேவாய்த்துடுக்காகப் பேசியது தமிழ் மக்களைக் கொதிப்படையச் செய்தது. உடனடியாக நமது தொல்லியல் துறை அமைச்சர்தங்கம் தென்னரசு அவர்கள், “முதலில் அவர்கள் கீழடியில் ஒன்றுமே இல்லை என்றார்கள். அடுத்து ஆய்வதிகாரியை இடம் மாற்றினார்கள். அப்புறம் இனிமேல் நிதியே ஒதுக்க மாட்டோம் என்றார்கள். சமர்ப்பித்த அறிக்கையை இரண்டாண்டுகள் கிடப்பில் போட்டார்கள். இப்போது வந்து ஆதாரம் போதவில்லை என்கிறார்கள். அவர்களுக்கு ஒவ்வொரு முறையும் தமிழர்களின் வரலாற்றை நிராகரிப்பது பொதுவாக இருக்கிறது. கண்டுபிடிக்கும் காரணங்கள் தான் வேறு வேறாக இருக்கிறது. வரலாறும், அது கூறும் உண்மையும் உங்களது மலிவான அரசியலுக்காகக் காத்திருக்காது. அவை மக்களுக்கானவை. மக்களிடமே சென்று சேரும்!பூனைகண்ணை மூடிக்கொண்டுவிட்டால் உலகம் இருண்டுவிடுமா என்ன?” எனப் பொட்டில் அடித்தார்போல பதிலடி கொடுத்தார்.

மாண்புமிகு தமிழ்நாடு முதல்வர் அவர்கள் மாணவர் அணி சார்பில் கீழடி அகழாய்வை ஏற்க மறுக்கும் ஒன்றிய அரசைக் கண்டித்து ஆர்ப்பாட்டம் நடைபெறும் என அறிவித்ததோடு, “எத்தனை எத்தனை தடைகள் நம் தமிழினத்துக்கு? அத்தனையையும் ஆயிரம் ஆயிரம் ஆண்டுகளாக எதிர்த்துப் போராடி, அறிவியல் துணைக்கொண்டு நம் இனத்தின் தொன்மையை நிறுவி வருகிறோம்!இருந்தும் ஏற்க மறுக்கின்றன சில மனங்கள். திருத்த வேண்டியது அறிக்கைகளை அல்ல; சில உள்ளங்களை!” எனப் போர்முழக்கமிட்டார்.

இதையடுத்து கழகத் தலைவரின் புறநானூற்றுப் படையாக மாணவர் அணி ஜூன் 18ம் தேதி மதுரைவிரகனூர் சுற்றுச்சாலையில் காலை 10 மணி தொடங்கி பிற்பகல் 12 மணி வரை கண்டன ஆர்ப்பார்ட்டம் மிகப்பெரும் எழுச்சியோடு நடத்தியது. இதில் தென் மாவட்டங்களிலிருந்து மட்டும் 15000 மேற்பட்ட மாணவர்கள், இளைஞர்கள் பங்கெடுத்து கீழடி அகழாய்வை வெளிப்படுத்த மறுக்கும் ஒன்றிய அரசுக்கு எதிராக முழக்கங்களை எழுப்பினர். தி.மு.க துணைப் பொதுச்செயலாளர் திருச்சி சிவா எம்.பி அவர்கள் கண்டன எழுச்சியுரை ஆற்றினார்கள்.



இரா.ராஜீவ்காந்தி
செயலாளர்
கழக மாணவர் அணி

ஆனால், இத்தனைக்கும் நடுவே அ.தி.மு.க-வும் அக்கட்சியின் பொதுச்செயலாளர் எடப்பாடியும் எஜமான பாசத்தில் வாய்மூடி கைகட்டி வேடிக்கை பார்த்துக்கொண்டுதான் இருந்தனர். தமிழர் அடையாளம், தொன்மத்தை மறைத்து தமிழர்களை இரண்டாம் தரக் குடிமக்களாக நடத்தும் பாசிச பா.ஜ.க அரசுக்கு எதிராகக் குரல் கொடுப்பதைவிட்டுவிட்டு மாறாக தமிழ்நாட்டில் மதக் கலவரத்தைத் தூண்டும் நோக்கில் பா.ஜ.க நடத்தும் முருகன் மாநாட்டில் கலந்துகொள்வோம் எனக் கூவுகிறார்கள். தமிழக முதல்வர், கழகத் தலைவரின் போர் முழக்கத்தை வழிமொழிந்து புறநானூற்றுப் போர் மறவர்களாக மாணவர் அணியினர் நடத்திய கண்டன ஆர்ப்பாட்டம் கீழடிதான் தமிழர் தாய்மடி,தமிழன் தான் உலகின் மூத்த குடிஎன்பதை மீண்டும் உலகின் பார்வையில் முன்னிறுத்திய ஒளியாக இருந்திருக்கிறது. இப்போது வந்து கீழடிக்காக நாங்கள்தான் எல்லாம் செய்தோம் எனப் பங்குப் பிச்சை கேட்டு நிற்கிறார்கள். உண்மையில் கீழடிக்காக என்ன செய்தார் எடப்பாடி பழனிசாமி?

**கலைஞர் எச்சரித்தார்; திமுக போராடியது நீதிமன்றம் உத்தரவிட்டது; அதிமுக பணிந்தது**

2013-ஆம் ஆண்டு ஐக்கிய முற்போக்குக் கூட்டணி ஆட்சியில் இந்தியத் தொல்லியல் துறையால் வைகை ஆற்றங்கரையில் தள ஆய்வு நடத்தப்பட்டு, கீழடி ஒரு முக்கிய குடியிருப்புத் தளம் என அடையாளம் காணப்பட்டது. அப்போது வெளியான அகழாய்வு முடிவுகளின் அடிப்படையில் 2016-ஆம் ஆண்டிலேயே “ஹரப்பாவை ஒத்த தமிழர் நாகரிகத்துக்கான கீழடி சான்றுகளை உடனடியாகக் காப்பாற்றவும், பாதுகாக்கவும் தவறினால், அவை முடங்கிப் போகும் பேராபத்து உருவாகும்” எனக் கீழடி ஆய்வுகளின் பெருமை குறித்து முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் பேசியதோடு, “நாம் கவனமாக இருக்க வேண்டும்” எனவும் எச்சரித்திருக்கிறார்.

அவர் எச்சரித்தது போலவே, ஒன்றிய பா.ஜ.க. அரசு, கீழடி அகழாய்வுகளில் வெளிப்பட்ட தமிழ்ப் பண்பாட்டின் பெருமையை மறைக்கவும் புதைக்கவும் தொடர்ந்து முயன்று வருகிறது. 2013-14 காலகட்டத்தில் தொடங்கிய அகழாய்வு, 2014-15,2015-16ஆம் ஆண்டுகளில் மூன்று கட்டங்களாக நடத்தப்பட்டு நிறுத்தப்பட்டது. ஆனாலும் தளராமல், முதல் மூன்று கட்ட ஆய்வுகளின் அடிப்படையில் 2017 பிப்ரவரியில் அமர்நாத் ஓர் இடைக்கால அறிக்கையைத் தாக்கல் செய்தார். அதில், “நகரிய நாகரிகத்திற்கான கட்டுமானங்கள் மற்றும் இதர சான்றுகள் கீழடியில் முதல் முறையாகக் கிடைத்திருக்கின்றன” எனச் சுட்டிக்காட்டினார். அவ்வளவுதான், உடனடியாக அவரை கீழடியிலிருந்து தூக்கியடித்ததோடு அவருக்குப் பதிலாக ஸ்ரீராமன் என்பவரைப் நியமித்தது ஒன்றிய அரசு. கீழடியில் அகழாய்வைத் தொடர்ந்த ஸ்ரீராமனோ, “மேற்கொண்டு சான்றுகளே அகப்படவில்லை” என பா.ஜ.க எதிர்பார்த்த ஒரு பக்க அறிக்கையை அளித்து, மூன்றாமாண்டோடு தனது ஆய்வினை முடித்துக் கொண்டார். அத்தோடு அகழாய்வையே ஊற்றி மூடிவிட்டுக் கீழடியையே காலி செய்தது ஒன்றிய தொல்லியல் துறை.

அதுமட்டுமல்ல, தனியார் நிலத்தில் ஆய்வு நடப்பதாகவும், நீதிமன்றத்தில் வழக்கு நடப்பதாகவும் கதைகூறி அகழ்வாராய்ச்சியை நிறுத்தினர். அந்த சூழலில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள்ஓர் அறிக்கையை வெளியிட்டார். அதில், ‘கீழடி நாகரித்துக்கும் - சிந்துவெளி நாகரிகத்துக்கும் உள்ள தொடர்பை கீழடி ஆய்வு வெளிப்படுத்தியுள்ளது. இதுவரை சொன்ன பொய்க் கதைகள் எல்லாம் இதன்மூலம் மாற்றியமைக்கப்படுகிறது’ எனவும் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் குறிப்பிட்டார். இதையடுத்து அமைச்சர் தங்கம் தென்னரசுவும், கழகத் துணைப் பொதுச்செயலாளர் கனிமொழி கருணாநிதி எம்.பி அவர்களும் கீழடி ஆய்வுக்கே சென்றனர். கழகத் துணைப் பொதுச்செயலாளர் கனிமொழி கருணாநிதி அவர்கள் ஒருபடி மேலே சென்று உச்சநீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்தார். அந்த வழக்கின் தீர்ப்பில், “எதற்காக ஆய்வுகளை நிறுத்தினீர்கள்” என ஒன்றிய அரசைக் கேள்விக் கணைகளால் துளைத்ததோடு, “அகழ்வாராய்ச்சியை தொடர்ந்து நடத்தவேண்டும்; மைசூருக்கு கொண்டு சென்ற பொருள்கள் மீண்டும் தமிழகத்திற்குக் கொண்டு வர வேண்டும்; அவற்றைப் பாதுகாக்க ஓர் அருங்காட்சியகம் அமைக்க வேண்டும்” எனவும் தீர்ப்பு வழங்கியது உச்சநீதிமன்றம். அதையடுத்தே 2018ஆம் ஆண்டு, சிவானந்தம் தலைமையில் தமிழகத் தொல்லியல் துறையே அகழ்வாய்வை மேற்கொண்டது. ஆனால், அதையும் தொடராமல் 09.10.2019ஆம் ஆண்டு எந்தக் காரணமும் சொல்லாமல் அதை நிறுத்துவதாக அடிமை அ.தி.மு.க. அரசு அறிவித்தது.

**கீழடி அகழாய்வை ஏன் நடக்கவிடாமல் தடுக்கிறார்கள் ஏன் வெளியிடாமல் தவிர்க்கிறார்கள்?**

கழக ஆட்சி அமைந்தது. தலைவர் அவர்களின் ஆட்சி அமைந்ததும் கீழடி அகழாய்வுப் பணிகளுக்கு மீண்டும் உயிர்கிடைத்தது. மேலும் கழக ஆட்சி அமைந்ததும் கிடப்பில் போடப்பட்ட கீழடி அகழாய்வுக்கு மீண்டும் உயிர்கொடுக்கப்பட்டது. தெற்கிலிருந்து வடக்கு நோக்கி, “கீழடி என்ற ஒற்றைச் சொல் உலகத் தமிழர்களை ஒன்றிணைத்துள்ளது. அதே உணர்வைத் தாங்கி தமிழ்நாடு அரசின் தொல்லியல் துறை, கீழடி, ஆதிச்சநல்லூர், சிவகளை, கொற்கை, மயிலாடும்பாறை, கொடுமணல், கங்கை கொண்ட சோழபுரம் ஆகிய இடங்களில் அகழாய்வுகளை மேற்கொண்டுவருகிறது. இந்தியத் துணைக் கண்டத்தின் வரலாறு இனி தமிழ் நிலப்பரப்பிலிருந்துதான் தொடங்கி எழுதப்பட வேண்டும் என்பதைச் சான்றுகளின் அடிப்படையில் நிறுவுவதே தமிழ்நாடு அரசின் கடமை” எனக் கூறி, 2021ஆம் ஆண்டு கீழடி அகழாய்வு முடிவுகளை சட்டமன்றத்தில் வெளியிட்டார்.

கீழடி நாகரீகம் கிட்டத்தட்ட சிந்து சமவெளி நகரக் காலத்துக்கு மிகவும் நெருக்கமாக இருக்கிறது. கீழடியில் இதுவரை ஒரு சதவிகிதப் பகுதி மட்டுமே அகழாய்வு செய்யப்பட்டுள்ளது. அகழாய்வு பணி தொடர்ந்து நடைபெற்றால் தொடக்க கால இரும்புக் காலப் பண்பாட்டுக் கூறுகள் கிடைக்க வாய்ப்புகள் உள்ளன. இதையொட்டித்தான் மாண்புமிகு முதல்வர் அவர்கள் “இந்தியாவின் வரலாறு தெற்கிலிருந்து எழுதப்பட வேண்டும்” எனக் கூறினார். மற்றொன்று நகரப் பண்பாட்டின் தொடக்கம் கீழடியிலிருந்து இருக்கும் என்ற முடிவுக்கும் தொல்லியல் வல்லுநர்கள் வந்திருக்கிறார்கள். கீழடி அகழாய்வின் பரப்பளவு, உள்நாடு, வெளிநாட்டு வணிகச் செயல்பாடுகள், வணிகப் பெருவழிகள், தொழில்நுட்பத்திறன், பல்வேறு இனக்குழுக்கள் வாழ்ந்ததற்கான தடயங்கள் எழுத்துகளின் பயன்பாடு, மொழியியல் கட்டமைப்பு எல்லாம் மிகப்பெரிய நகரம் இருந்ததற்கான சான்றாக இருக்கின்றன. இறுதியாக மொழி, இதுவரை தமிழ் பிராமி எழுத்தின் வடிவம் கிமு 5ஆம் நூற்றாண்டு எனச் சொல்லப்பட்டு வந்த நிலையில் தற்போது அதற்கும் ஒரு நூற்றாண்டுக்கு முந்தையக் காலம் என கீழடி அகழாய்வு மூலம் தெரிய வந்திருக்கிறது. ஐந்தாயிரத்துக்கும் மேற்பட்ட குறியீடுகள் கிடைத்துள்ளன. இதன்மூலம் சிந்துவெளி நாகரிக கால எழுத்துக் குறியீடுகளும் கீழடியில் கிடைத்த எழுத்துகளுக்கும் நெருங்கிய தொடர்பு இருப்பது தெளிவாகியிருக்கிறது. அப்படியானால் இந்தியாவின் மூத்த மொழி தமிழ் என்பதும் புலனாகிறது.

ஒன்றிய பா.ஜ.க.வின் வரலாறு, மொழி, பண்பாடு தொடர்பான அனைத்துக்கும் புரட்டுகளையும் கீழடி அடித்து நொருக்கியிருக்கிறது. கீழடி அகழாய்வை வெளியிட்டால் தமிழன், தமிழ் மொழி குடியால் மூத்த குடி, பண்பாட்டால் மேம்பட்ட இனம், மொழியால் தொன்மையானது என்பதை ஒப்புக்கொள்ள வேண்டி வரும். எனவேதான் அதை ஏற்க மனமில்லாமல் புறந்தள்ளுகிறார்கள். அடிமை பழனிசாமியும் கைகட்டி வேடிக்கை பார்க்கிறார்.